**பிப்ரவரி – 07**

# TNPSC துளிகள்

- குழாய் நீரானது இந்தியத் தர நிர்ணய விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும் பகுதிகளில் உள்நாட்டு எதிர்ச் சவ்வூடு பரவல் அமைப்புகளைத் தடை செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- சுத்திகரிக்கப்பட்ட டெரெப்தாலிக் அமிலத்தை (Purified Terephthalic Acid - PTA) இறக்குமதி செய்வதற்கான பொருள் குவிப்புக்கு எதிரான வரியை மத்திய அரசு ரத்து செய்வதாக நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.
- ஐசட்நகரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் - இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிறுவனமானது (Indian Veterinary Research Institute - IVRI) மரபு வழிப் பன்றிக் காய்ச்சல் (classical Swine Fever - CSF) செல் தடுப்பூசியை உருவாக்கி வருகின்றது.
    - CSF என்பது பன்றிகளில் ஏற்படும் மிக முக்கியமான நோய்களில் ஒன்றாகும். இது அதிக அளவிலான இறப்புகளை ஏற்படுத்துகின்றது.
- நாசாவைச் சேர்ந்த கிறிஸ்டினா கோச் என்ற ஒரு பெண்மணி விண்வெளியில் மிக நீண்ட நாட்கள் தங்கியிருந்து, பின்னர் தற்பொழுது பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பியுள்ளார்.
    - இவர் 328 நாட்கள் (11 மாதங்கள்) சர்வதேச விண்வெளி நிலையத்தில் (International Space Station - ISS) இருந்துள்ளார்.
- மேற்கு ரயில்வே துறையானது முதன்முறையாக மின்சார என்ஜின்களின் அடையாளக் குறியிடுதலை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இது ரயில்வே துறைக்குக் கூடுதலாக ரூ. 1.05 கோடி வருவாயை ஈட்ட உதவ இருக்கின்றது.
- மேற்கு ஒடிசா, சத்தீஸ்கர் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலத்தின் சில பகுதிகள் ஆகியவற்றின் ஒரு முக்கியமான பொதுச் சுகாதார மையமான விம்சார் என்ற மையத்தில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் இறந்துள்ளனர்.
    - விவசாயிகளின் இந்த இறப்புகளுக்குக் காரணம் பாராக்வாட் எனப்படும் விவசாய வயல்களில் பயன்படுத்தப்படும் ஒரு களைக் கொல்லியாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## சென்னையில் ஃபோர்டு நிறுவனத்தின் புத்தாக்க மையம்

- முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி சென்னையில் தானியங்கி வாகன உற்பத்தி நிறுவனமான ஃபோர்டு நிறுவனத்தின் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மையத்தைத் திறந்து வைத்துள்ளார்.
- இந்த மையமானது சென்னையில் உள்ள சோழிங்கநல்லூரில் உள்ள தமிழ்நாட்டின் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மின்னணுக் கழகத்தில் (ELCOT SEZ - Electronics Corporation of Tamil Nadu’s Special Economic Zone) அமைந்துள்ளது.
- இந்த மையத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று இயக்க அனுபவ ஆய்வகம் அமைந்துள்ளதாகும்.




# தேசியச் செய்திகள்

## கடல்சார் பாதுகாப்புக் குறித்த கிழக்கு ஆசிய உச்சி மாநாடு

- கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான நான்காவது கிழக்கு ஆசிய உச்சி மாநாடானது (East Asia Summit - EAS) தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நடைபெற இருக்கின்றது.
- EAS கடல்சார் பாதுகாப்பு மாநாடானது இந்திய அரசினால் 2015 ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.
- நான்காவது மாநாடானது பின்வரும் அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப் படுகின்றது. அவையாவன:
    - மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம்.
    - ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்கள்.


## சூரிய ஒளி இடர் குறைப்பு முன்முயற்சி

- உலக வங்கி மற்றும் எரிசக்தித் துறை மேலாண்மை உதவித் திட்டமானது (WB-ESMAP - World Bank– Energy Sector Management Assistance Program) பின்வரும் அமைப்புகளுடன் இணைந்து சூரிய ஒளி இடர் குறைப்பு முன்முயற்சியை (SRMI - Solar Risk Mitigation Initiative) உருவாக்கியுள்ளது.
    - ஏஜென்ஸ் ஃபிராங்காயிஸ் டி டெவலப்மென்ட் (AFD - Agence Française de Développement),
    - சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனம் (International Renewable Energy Agency - IRENA) மற்றும்
    - சர்வதேச சூரிய ஒளிக் கூட்டிணைவு (International Solar Alliance - ISA).
- SRMI என்பது தனியார் முதலீடுகளை ஈர்க்கக் கூடிய நீடித்த சூரிய ஒளித் திட்டங்களை உருவாக்குவதில் நாடுகளுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பொது நிதியியல் மீதான நம்பகத்தன்மையைக் குறைக்க இருக்கின்றது.
- இது சூரிய ஒளி தொடர்பான இடரைத் தணிப்பதற்காக பின்வரும் மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவன:

- நீடித்த சூரிய ஒளி இலக்குகள்,
- வெளிப்படையானக் கொள்முதல்,
- சாத்தியமான இடர் குறைப்புப் பாதுகாப்பு.

### தேசிய உற்பத்தித்திறன் ஆணைய ஆய்வு

- மண் வள அட்டைகளின் பயன்பாடானது நாட்டில் உரப் பயன்பாட்டை 10% அளவிற்கு குறைத்துள்ளதாக தேசிய உற்பத்தித் திறன் ஆணையம் தெரிவித்துள்ளது.
- மண் வள அட்டை காரணமாக உற்பத்தித் திறனானது 5 - 6% அளவிற்கு அதிகரித்துள்ளது என்றும் இந்த ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- இதற்கு முக்கியக் காரணம் மண் அட்டைத் திட்டமாகும்.
- மண் ஊட்டச்சத்துக்கள் குறைந்து வரும் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு 2014 - 15 ஆம் ஆண்டில் மோடி அரசால் மண் ஆரோக்கிய அட்டை திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.




## சர்வதேசச் செய்திகள்

### ப்ளூ டாட் அமைப்பு

- அமெரிக்க அதிபரின் இந்தியப் பயணத்தின் போது அமெரிக்கா தலைமையிலான ப்ளூ டாட் அமைப்பில் இந்தியா (Blue Dot Network - BDN) இணைய இருக்கின்றது.
- ப்ளூ டாட் அமைப்பு என்ற ஒரு முன்முயற்சியானது 2019 ஆம் ஆண்டில் தாய்லாந்தில் உள்ள பாங்காக்கில் நடைபெற்ற இந்தோ - பசிபிக் வர்த்தக மன்றக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.




- அமெரிக்கா தலைமையிலான இந்த முன்முயற்சியானது பின்வரும் அமைப்புகளினால் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது.
  - அமெரிக்க வெளிநாட்டுத் தனியார் முதலீட்டுக் கழகம் (OPIC - US Overseas Private Investment Corporation)

- ஆஸ்திரேலியாவின் வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை (DFAT - Department of Foreign Affairs and Trade)
- சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி (JBIC - Japan Bank for International Cooperation).

## நீடித்த வளர்ச்சிக் கட்டணம்

- இந்தியா, மாலத்தீவு மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நீடித்த வளர்ச்சிக் கட்டணத்தை (Sustainable Development Fee - SDF) பூடான் நாடு விதிக்க இருக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல், நாள் ஒன்றிற்கு ரூ. 1,200 ($ 17) என்ற அளவில் கட்டணமானது விதிக்கப்பட இருக்கின்றது.
- அந்நாட்டில் அதிகரித்து வரும் சுற்றுலா நெரிசலை எதிர்கொள்வதற்காக இது உதவ இருக்கின்றது.

## செனட் சபை விசாரணையில் அமெரிக்க அதிபர் விடுவிப்பு

- பிரதிநிதிகள் சபையால் குற்றம் சாட்டப்பட்ட அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் செனட் சபை விசாரணையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.
- இவர் தற்பொழுது அமெரிக்க வரலாற்றில் பிரதிநிதிகள் சபையால் குற்றம் சாட்டப்பட்டு செனட் சபையால் விடுவிக்கப்பட்ட மூன்றாவது அதிபராக உருவெடுத்துள்ளார்.
- மற்ற இரண்டு அதிபர்கள்
    - பில் கிளிண்டன் (1999) மற்றும்
    - ஆண்ட்ரூ ஜான்சன் (1868).

# பொருளாதாரச் செய்திகள்

## இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் ரிசர்வ் வங்கியின் 6வது நாணயக் கொள்கை

- ரிசர்வ் வங்கியானது (Reserve Bank of India - RBI) இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் 2020-21க்கான தனது 6வது நாணயக் கொள்கை விகிதங்களை மகாராஷ்டிராவின் மும்பையில் அறிவித்தது.
- பணவியல் கொள்கைக் குழுவின் இந்த கொள்கை மறுஆய்வுக் கூட்டமானது ரிசர்வ் வங்கியின் ஆளுநரான சக்திகாந்த தாஸ் தலைமையில் நடைபெற்றது.

| Policy Rates under Liquidity Adjustment Facility (LAF) | Value |
|---|---|
| **Repo Rate** | 5.15% |
| **Reverse Repo Rate** | 4.90% |
| **Marginal standing facility (MSF) Rate** | 5.40% |
| **Bank Rate** | 5.40% |
| **Reserve Ratios** | |

| | |
|---|---|
| **Cash reserve Ratio (CRR)** | 4% |
| **Statutory Liquidity Ratio (SLR)** | 18.25% |
| **GDP Prediction for 2020-21** | 6 % (from 5 % in FY20) |
| **CPI Inflation- H1:2020-21** | 5.4-5.0 % |

# மாநிலச் செய்திகள்

## மெய்நிகர் காவல் நிலையம் - ஒடிசா

- ஒடிசா காவல்துறையின் இதர 2 உருமாறும் (மாற்றத்தைக் கொண்டு வரும்) திட்டங்களுடன் ஒரு மெய்நிகர் காவல் நிலையத்தை ஒடிசா மாநில அரசு தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டங்களின் நோக்கம் அரசாங்க அலுவலகங்களுடன் மக்களின் இடையீட்டைக் குறைப்பதாகும்.
- www.imsop.odisha.gov.in என்ற இணையதளத்தில் இருந்து மக்கள் முதல் தகவல் அறிக்கை, இறுதிப் படிவம், குறிப்பிட்ட பகுதியின் வரைபடம், விசாரணை தொடர்பான ஆவணங்களை அணுகலாம்.
- 3 திட்டங்கள் பின்வருமாறு
  - மெய்நிகர் காவல் நிலையம்,
  - சாலை விபத்து வழக்குகள் ஆவணங்களின் தொகுப்பு மற்றும்
  - மருத்துவ சட்டக் கருத்துகள் அமைப்பு.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## PEN கௌரி லங்கேஷ் விருது 2019

- ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த மூத்தப் பத்திரிகையாளரான யூசுப் ஜமீல் என்பவர் பத்திரிக்கைத் துறையில் சிறந்து விளங்கியதற்காக ஜனநாயக இலட்சியவாதத்திற்கான 2019 - 20 PEN கௌரி லங்கேஷ் விருதினை வென்றுள்ளார்.
- இந்த விருதினை PEN தென்னிந்திய மற்றும் PEN தில்லி ஆகியவை 2017 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிக்கை ஆசிரியரான மறைந்த கௌரி லங்கேஷ் என்பவரது பெயரில் நிறுவியுள்ளன.
- இந்த விருதானது ரூ. 1 லட்சம் நிதித் தொகையையும் சான்றிதழையும் கொண்டுள்ளது.

## பாதுகாப்புத் துறைக் கண்காட்சி 2020 (DefExpo)

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 5 ஆம் தேதி முதல் 9 ஆம் தேதி வரை லக்னோவில் (உத்தரப் பிரதேசம்) முதல் முறையாக பாதுகாப்புத் துறைக் கண்காட்சியானது நடைபெறுகின்றது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் ஒரு முதன்மை நிகழ்வாகும்.
- ஒரு மிகப்பெரிய பாதுகாப்புக் கண்காட்சியான இந்தப் பாதுகாப்புத் துறைக் கண்காட்சியின் 11வது பதிப்பு இதுவாகும்.

- இந்த நிகழ்வின் 10வது பதிப்பானது சென்னையில் (தமிழ்நாடு) 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் இந்த நிகழ்வின் கருப்பொருள் 'இந்தியா: வளர்ந்து வரும் பாதுகாப்பு உற்பத்தி மையம்' என்பதாகும்.
- இது 'பாதுகாப்புத் துறையில் டிஜிட்டல் மாற்றம்' என்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- பாதுகாப்புத் துறைக் கண்காட்சி - 2020 ஆனது இந்தியாவின் விண்வெளி, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நலன்களின் விரிவான வகைகளைக் காண்பிக்க இருக்கின்றது.
- இந்தக் கண்காட்சியின் ஒரு பகுதியாக 5வது இந்திய ரஷ்ய ராணுவத் தொழில் துறை மாநாடானது நடைபெற இருக்கின்றது.




# விளையாட்டுச் செய்திகள்

## ஆஸ்திரேலிய ஓபன் 2020 வெற்றியாளர்கள்

- ஆஸ்திரேலிய ஓபன் 2020 போட்டியின் 108வது பதிப்பானது சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் 2020 பிப்ரவரி 2 ஆம் தேதி நிறைவடைந்தது.
- ஆண்டுதோறும் விளையாடப்படும் 4 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் இதுவும் ஒன்றாகும்.


| S.No. | Category | Winner | Runner Up |
|---|---|---|---|
| 1 | Men's Singles | **Novak Djokovic** (Serbia) | Dominic Thiem (Austria) |
| 2 | Women's Singles | **Sofia Kenin** (USA) | Garbiñe Muguruza (Spain) |
| 3 | Men's Doubles | Rajeev Ram (American) & Joe Salisbury (British) | Max Purcell (Australia) & Luke Saville (Australia) |
| 4 | Women's Doubles | Tímea Babos & Kristina Mladenovic | Hsieh Su-wei & Barbora Strýcová |
| 5 | Mixed Doubles | Nikola Mektic & Barbora Krejcikova | Jamie Murray & Bethanie Mattek-Sands |

- நோவோக் ஜோகோவிச் எட்டாவது ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்று ஏடிபி தர வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- கடந்த 12 ஆண்டுகளில் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்ற இளம் வயதுப் பெண்மணி என்ற பெருமையை சோபியா கெனின் பெற்றுள்ளார்.
- கிரீன்செட் உலகளாவிய அமைப்பால் உருவாக்கப்பட்ட கடினமான மேற்பரப்பான கிரீன்செட் உடன் நடத்தப்பட்ட ஆஸ்திரேலிய ஓபனின் முதல் பதிப்பு இதுவாகும்.

# முக்கிய தினங்கள்

## பெண் பிறப்புறுப்பு சிதைவுக்கு எதிராக சகிப்புத்தன்மையல்லாததற்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 06

- பெண் பிறப்புறுப்பு சிதைவை (Female Genital Mutilation - FGM) ஒழிப்பதற்கான ஐ.நா.வின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த விழிப்புணர்வு தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- இந்நாளானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பெண் குழந்தைகள் மற்றும் பெண்களின் மனித உரிமைகளை மீறும் நடவடிக்கையான FGM குறித்த விழிப்புணர்வை இந்நாள் பரப்புகின்றது.
- இந்த ஆண்டுக்கான கருப்பொருள் - "இளைஞர் சக்தியைப் பரப்புதல்: சுழிய பெண் பிறப்புறுப்பு சிதைவுக்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான ஒரு பத்தாண்டு காலம்" என்பதாகும்.
- இந்தக் கருப்பொருளானது 2030 ஆம் ஆண்டுக்குள் FGMஐ ஒழிப்பதின் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.
- இந்த நடைமுறையானது பொதுவாக ஆப்பிரிக்காவின் வடகிழக்கு, கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் வழக்கத்தில் உள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியமும் யுனிசெஃப்பும் இணைந்து FGMஐ ஒழிப்பதற்கான மிகப்பெரிய உலகளாவியத் திட்டத்திற்குத் தலைமை தாங்கின.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★